ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# விளையாட்டு அன்றும் இன்றும்

**திருமதி.அ.ஏஞ்சல் ராணி**
**உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை**
**ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி**
angelrani21102009@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

விளையாட்டு என்பது செயற்பாட்டினைப் பொறுத்தது அன்று. ஈடுபடுவோரின் மனநிலையைப் பொறுத்தது. அம்மனநிலை செயல்பாட்டிலேயே ஆறுதல் பெறுவதாகும். நாட்டுப்புறங்களில் நடைபெறும் விளையாட்டுகளை ஆராய்வது மக்களின் நடைமுறைகளையும் நல் வாழ்வினையும் ஆராய்வதற்குச் சமமானது எனலாம். விளையாட்டு என்பது மனிதனின் இயற்கையான இயக்கங்களின் தொகுப்பு, மகிழ்ச்சியான செயலாக அறிஞர்களால் போற்றப்படுகிறது. இது உடற்பயிற்சி மட்டுமல்லாமல், மனமகிழ்ச்சி, குழுவாக இணைந்து செயல்படுதல் மற்றும் பண்புகளைக் கற்றுக்கொள்ள உதவும் ஒரு வழியாகும். இத்தகைய விளையாட்டு நாட்டுப்புறங்களில் எவ்வாறு கொண்டாடப்பட்டது என்றும் இன்று விளையாட்டு எந்த நிலையில் உள்ளது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

க்ரியா அகராதியில் “விளையாட்டு" என்ற சொல், உடல் அல்லது மனதிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒரு செயல்பாடு அல்லது போட்டி[1] என்று விளக்கப்படுகிறது.

**திரவுச்சொற்கள்:** சிலம்பம், விளையாட்டு, மற்போர், சடுகுடு , மஞ்சுவிரட்டு

## 1.வீர விளையாட்டுக்கள்

வீர விளையாட்டுக்கள் பெரும்பாலும் வீட்டிற்கு வெளியே நடைபெறுவதாகும். இவ் விளையாட்டுகளின் வெற்றி தோல்வியானது விளையாட்டு வீரர்களை மிகவும் பாதிக்கும். இவ் விளையாட்டுகள் அனைத்தும் விளையாட்டு வீரர்கள் தவிர்த்த மற்ற அனைவரும் கண்டு களித்து மகிழும் வகையில் அமைந்திருக்கும்.

### 1.1.சிலம்பம்

இவ்விளையாட்டு தற்காப்பு விளையாட்டாகவும் தாக்குதல் போராகவும் உள்ளது. இந்த விளையாட்டில் சுருள்வாள், பந்துகோல், எரிக்கழி போன்ற கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. கம்புவிளையாட்டு, நெற்றி பொட்டு விளையாட்டு, உயில் சிலம்பு என்ற பல பெயர்களைக் கொண்டு இவ்விளையாட்டை அழைப்பர். சிலம்பு என்றால் ஒலித்தல் என்று பொருள். கம்புகளை அடித்து ஒலி எழுப்புவதால் இப்பெயர்

வந்திருக்க வேண்டும் என்று பலர் கருதுகின்றனர். அஞ்சாமை, வீரம், நுட்பம், துரிதம், கவனம் ஆகிய தன்மைகள் உடையவர்களே தேர்ந்த சிலம்புக் கலைஞர்களாக இருப்பர்.

**1.2. மற்போர்**

இது ஒரு தொன்மையான விளையாட்டு. உண்மையாகவே உள்ளத்தில் சினமோ, பகையோ இல்லாமல் வெற்றி தோல்விக்காக ஆடும் விளையாட்டு இது, இதற்கு மிகுந்த பயிற்சித் தேவை எனலாம். மல் என்றால் வலிமை என்று பொருள். தம் வலிமையை வெளிப்படுத்த போரிடுவதே மல் விளையாட்டு ஆகும். இதற்கென பழகிய மல்லர்களே இவ்விளையாட்டில் ஈடுபடுவர்.

**1.3. மஞ்சுவிரட்டு**

இந்த விளையாட்டை சல்லிக்கட்டு, மாடுபிடி, காளைப்போர், மஞ்சு வெருட்டு, மஞ்சுவிரட்டு என்று பலவாறு அழைப்பர். பழந்தமிழர் ஏறுதழுவுதல் என்பர். பொங்கல் திருவிழா காலங்களில் இவ்விளையாட்டு மிகவும் விமரிசையாக நடைபெறும். சல்லி என்பது காளையின் கழுத்தில் கட்டப்படும் வளையமாகும். காளையை அடக்கி சல்லியை பறிப்பவரே வென்றவர் ஆவார். வெற்றி வீரனுக்கு பரிசு அளிக்கப்படும். தென் மாவட்டங்களில் இந்த வீர விளையாட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**1.4. சடுகுடு**

பலிஞ் சடுகுடு, பலீன் சடுகுடு, கபடி என்று பலவாறு இவ்விளையாட்டை அழைப்பர். பழந்தமிழர் அரசர்களிடையே நிரை கவர்தலும் கவர்ந்த நிரைகளை மீட்பதுமாகிய செயல்கள் இருந்தன. இதன் அடிப்படையில் போரும் எழுந்தது. போரில் தங்கள் பக்கம் வெற்றி கிட்ட வேண்டுமென்று இரு தரப்பினருமே காளியை வணங்கினர். இச்சமயம் சடுகுடுப்பை அல்லது குடுகுடுப்பை என்ற பறையால் ஒலி எழுப்பிப் பலி கொடுத்து வழிபட்டனர். போரின் செயல்பாடு விளையாட்டிலும் இருப்பதால் பலிஞ் சடுகுடு என மாறி மருவி வந்திருக்கலாம் என்பார் எஸ். நவரோஜ் செல்லையா.[2]

**1.5. மிருகப் போர்**

பன்றி, ஆடு போன்ற மிருகங்களையும் சேவல் போன்ற பறவைகளையும் ஒன்றோடு ஒன்று போரிட வைக்கும் விளையாட்டுகளும் உண்டு. யாருடைய மிருகம் அல்லது பறவை வெல்கிறது என்ற போட்டியே விளையாட்டில் உள்ளது. சேவல் போரைச் சேவல் கட்டு என்பர். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள காடுவெட்டி என்ற ஊரில் வாரம் தோறும் நடைபெறுகிறது. ஆட்டு கிடாய்களும் போரிடும் அவற்றின் கொம்புகள் பயங்கரமான ஒலியுடன் மோதும். இதற்கென போர்க்கடாக்களைக் கவனித்து வளர்ப்பர். மாட்டு வண்டி பந்தயமும் குறிப்பிடத்தக்கது. இவற்றில் ஒற்றை மாட்டு வண்டியை ‘ரேக்ளா’ என்றும் இரட்டை மாட்டு வண்டியை ‘வண்டி பந்தயம்’ என்று அழைப்பர். முந்துகின்ற வண்டிக்காரருக்குப் பரிசுப் பணம் கிடைக்கும் என்பார் டாக்டர் ஏ.என்.பெருமாள்.[3]

**2. பொழுதுபோக்கு விளையாட்டுக்கள்**

பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் பெரும்பாலும் வீட்டிற்கு உள்ளேயும் குறைந்த அளவில் வெளியேயும் நடைபெறும். இவற்றை அக விளையாட்டு, புற விளையாட்டு என்று அழைப்பர்.

**2.1. பந்து விளையாட்டு**

கயிறு, துணி, இரப்பர் போன்றவற்றால் செய்யப்பட்ட பந்துக்களை எறிந்தும் உதைத்தும் போட்டுப் பிடித்தும் விளையாடுகின்றனர். பிள்ளையார் பந்து, பேயம் பந்து, கிட்டிப் பந்து, எறி பந்து, பதுவட்டிப்பந்து போன்ற பந்து விளையாடல்கள் கிராமங்களில் நடைபெறும். கால் பந்து, கூடைப் பந்து, பூப்பந்து, கைப்பந்து போன்ற நகர விளையாட்டுகள் தற்போது கிராமங்களில் தலை நீட்டினாலும் இவை நாட்டுப்புற விளையாடல்கள் அல்ல.

**2.2. பம்பரம்**

பம்பரம் என்பது ஒரு விளையாட்டுக் கருவி ஆகும். சாட்டை எனப்படும் கயிற்றால் ஆடுவது. கயிற்றுக்குப் பெயரே பம்பரக் கயிறு என ஆயிற்று. இது குத்துப் பம்பரம் எனவும் அழைக்கப்படும். வட்டத்துக்குள்ளே ஒருவனது பம்பரம் இருக்க, மற்றவர்கள் அப்பம்பரத்தைக் குத்தி வெளியே தள்ளுவார்கள். உடனே குத்துப்பட்டவனையும் சேர்த்து அனைவரும் பம்பரத்தைத் தரையில் விட்டுக் கயிற்றால் கையில் எடுக்க வேண்டும். கடைசியில் எடுப்பவர் வட்டத்துக்குள் பம்பரத்தை வைக்க வேண்டியது வரும். பம்பரத்தை தரையில் ஆடவிடுவதுடன் கயிற்றில், உள்ளங்கையில், உச்சந்தலையில், நெற்றியில் என ஆடவிடுவர். சிலர் பம்பரத்தை தரையில் விடாமலேயே கையில் எடுத்து விடுவர்.

**2.3. கோலிக்காய்**

கோலிக்காய் விளையாட்டை குண்டு விளையாட்டு என்று அழைப்பர். இதனை வட்டாடுதல், உருண்டை உருட்டுதல் என்று; அழைக்கப்படுகின்றன. குழிக்குண்டு, உருட்டுக்குண்டு, பேந்தா, ஜெய் குண்டு என நான்கு வகையில் அமையும். உருட்டு குண்டினை சில இடங்களில் இருகுழியாட்டம், முக்குழியாட்டம் என்று அழைப்பர்.

**2.4. கிட்டிப்புள்**

ஒரு பெரிய குச்சியும் சிறிய குச்சியும் வைத்து ஆடும் ஆட்டத்தை கிட்டிப்புள் என்பர். இது கோட்டுக்கிட்டி, கீந்துக்கிட்டி என இருவகைப்படும். வட்டமான கோடு வரைந்து விளையாடினால் கோட்டுக்கிட்டி ஆகும். நீளமான கம்பினை கையில் பிடித்துக் கொண்டு, சிறு கம்பினைப் பத்து வரைக்கும் தட்டுதல் வேண்டும். ஒரே தடவையில் பத்து அடித்தல் என்பது இயலாது. இரண்டு மூன்று தடவைகளில் அடித்து விடலாம். யார் முதலில் பத்து அடிக்கின்றாரோ அவரே பழம் ஆகிவிடுவார். இறுதியில் ஒருவர் காயவார். அதாவது தோற்றுப் போவார்.

**2.5. பொம்மை விளையாட்டு**

பெண்கள் துணி, மரக்கட்டை, மண், கல் போன்றவற்றால் பொம்மைகளை செய்து விளையாடுவர். குழந்தைகள் சிறு வீடு கட்டி விளையாடுவதும் இவ்விளையாட்டு தான். வண்டல் என்றும் பாவை என்றும் சங்க பாடல்கள் இதையே குறிப்பிடுகின்றன.

**2.6. தாயம்**

தாயம் என்பதற்கு உரிமை என்ற பொருள் தொல்காப்பியம் கூறும் வல்லாட்டமும் குறள் கூறும் வட்டாட்டமும் இதனோடு தொடர்புடையது. தாயம், பகடை, அ~;டாபதம், சதுரங்கம், செஸ் இவை ஏறக்குறைய ஒத்த தன்மையின. நான்கு கட்டத்தாயம், எட்டு கட்டத் தாயம், பத்து கட்டத்தாயம், தஞ்சாவூர்க் கட்டம், குரங்காட்டம் என நான்கு வகைப்படும். கட்ட விளையாட்டின் வளர்ச்சியே தாயம். போர்க்காலங்களில் ஒரு நாட்டிலிருந்து பிறிதோர் நாட்டுக்கு படையெடுத்துச் செல்பவர். மலைப்பகுதிகளைத் தாண்டிப் போயினர். இவ்விளையாட்டில் வெட்டுதல், குத்துதல், மலை போன்ற சொற்கள் போரைக் குறிக்கும்.

**2.7. கட்ட விளையாட்டுகள்**

பதினைந்தாம் புலி என்றும் புலியும் நாயும் என்றும் ஆடுபுலி ஆட்டம் என்றும் இவ்விளையாட்டை அழைப்பர். இவ்விளையாட்டு இந்தியா, இந்தோனேசியா, சுமத்திரா, இலங்கை ஆகிய நாடுகளில் வழக்கில் உள்ளது. மூன்று புலிகளும் பதினைந்து ஆடுகளும் இவ்விளையாட்டில் இடம்பெறுகின்றன. புலியை கட்டுவது இவ்வாட்டத்தின் நோக்கம். புலிக்கு வெட்டு இருப்பின் வெட்ட வேண்டும் என்றும் புலி ஒரு வேளையில் ஒரு வெட்டே வெட்டலாம் என்றும் புலியும், ஆடும் நேராகவே நகரும் என்றும் சில விதிகள் உள்ளன.

**2.8. பல்லாங்குழி**

தரையில் குழிகளை அமைத்தும், மரப்பலகைகளில் குழிகள் ஏற்படுத்தியும் விளையாடுவர். வெண்கலம், எவர்சில்வர் போன்ற உலோக குழிகளும் உள்ளன. காக்கா முத்து, வேப்பங்காய், களிப்பாக்கம், மொச்சைவிதை, மஞ்சாடி, கற்கள், புளியங்கொட்டை, சோழி, கல்யாண முருங்கைக் கொட்டை, குன்றிமணி, கோழிக்கால் போன்றவற்றை முத்துக்களாக பயன்படுத்துவர். பசுப்பாண்டி, எதிர்ப்பாண்டி, ராஜபாண்டி, காசிப்பாண்டி, கட்டும் பாண்டி, சீதைப்பாண்டி, சரிப்பாண்டி என ஏழு வகையாக அமையும். பாண்டி, அரசு, வால்குழி, பொய்க்குழி, நடுக்குழி, மூலைக்குழி, காய்க்குழி, காசிக்குழி, ராசாக்குழி, பொய்யாக்குழி எனக் குழிகள் பெயர் பெறும்.

இதுபோல இன்னும் நூற்றுக்கும் மேற்பட்ட விளையாட்டுக்கள் அன்றைய நாட்களில் மக்கள் விளையாடி வந்தனர். ஆனால் இப்போது இவ்விளையாட்டுக்கள் அனைத்தும் அழிந்து கொண்டே வருகின்றன எனலாம்.

### 3. இன்றைய விளையாட்டுக்கள்

மக்கள் இன்று விளையாட்டுக்கள் வீட்டுக்குள் விளையாடும் விளையாட்டுக்களாகவும் மைதானத்தில் சிறிதளவு மட்டுமே விளையாடக்கூடிய விளையாட்டுக்களாகவும் பெரும்பாலும் ஆன்லைன் விளையாட்டுக்களாகவும் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கிரிக்கெட் கால்பந்து கைப்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்கள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். வீடியோ கேம்ஸ், கம்ப்யூட்டர் கேம்ஸ் போன்ற விளையாட்டுக்கள் வீட்டின் உள்ளே இருந்து விளையாடுகின்றனர். ஸ்மார்ட் ஃபோன்கள் மற்றும் கணினிகள் மூலம் உலகெங்கும் உள்ளவர்களுடன் ஆன்லைன் விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமின்றி தொலைக்காட்சி மற்றும் யூடியூப் போன்ற இணையதளங்களிலும் விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

**விளைவுகள்**

அன்றைய விளையாட்டுகள் அனைத்தும் வீரம் சார்ந்ததாக இருந்தன. ஒற்றுமையை வலியுறுத்த கூடியதாகவும் ஆரோக்கியத்தின் வெளிப்பாடாகவும் இருந்தன. போரை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டுக்கள் அமைந்தன. மேலும் சமூகம், வரலாறு, குடும்பம் போன்றவற்றின் அடிப்படையாகக் கொண்டு விளையாட்டுக்கள் அமைந்திருந்தன. விளையாடும் போது பாடல்கள் பாடி விளையாடி வந்துள்ளனர். தெருக்களில் விளையாடியதால் ஒருவரோடு ஒருவர் நன்கு பழகிவிட்டுக் கொடுத்து ஒற்றுமையாக வாழும் தன்மை வெளிப்படுத்தப்பட்டது. விளையாட்டு வாழ்வில் மிக முக்கியமான ஒன்றாக கருதப்பட்டது.

ஆனால் இன்றோ மக்கள் ஓர் அறைக்குள் தன்னை கட்டுப்படுத்தி வைத்துக்கொண்டு கையிலுள்ள கையிடைபேசியின் மூலமாக விளையாடி மற்றவர்களோடு பழகும் பழக்கமின்றி தன்னை தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். இதனால் குரூரமான சிந்தனையும் ஆரோக்கியமற்ற நிலையும் உருவாகியுள்ளன. அமர்ந்த இடத்திலே அமர்ந்து விளையாடித் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டதன் விளைவாக வெகு விரைவாகவே மக்கள் இறப்பினைக் காண நேரிடுகிறது. மைதானத்தில் சென்று விளையாடுவதற்கு எந்த இளைஞனும் இப்போது விரும்புவதில்லை. இதனால் ஒற்றுமை குலைந்து சீர்கேடான நிலையில் மக்கள் வாழ்கின்றனர். பலருக்கு அன்றைய விளையாட்டுகளின் பெயர்கள் கூட தெரிவதில்லை.

**தொகுப்புரை**

சங்ககால மக்கள் தங்களது வாழ்வில் பின்பற்றிய விளையாட்டுக்களான ஆடுபுலி ஆட்டமும், பந்தாடுதல், ஊசல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் இன்றும் நம்முடைய வாழ்வியலோடு இருந்து வருவதை நாம் நமது சிறுவயது வாழ்க்கையிலும் அவற்றை விளையாடியுள்ளதன் மிகப்பெரிய மிச்சமிருக்கின்ற சுவடுகளாகவே இன்று அவை இருந்து வருகின்றன. வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் தற்போதைய ஜல்லிக்கட்டு விளையாட்டும் இன்றும் நம்முடன் இருந்து வருகிறது நமக்குப் பெருமையே. அத்தகைய விளையாட்டுக்களை பாதுகாப்பது நமது இன்றைய கடமையாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. க்ரியா தமிழ் அகராதி, ப.134
2. எஸ்.நவரோஜ் செல்லையா, விளையாட்டுகளுக்குப் பெயர் வந்தது எப்படி?, ப.60
3. டாக்டர் ஏ.என்.பெருமாள், தமிழர் நாட்டு விளையாட்டுக்கள், ப.71